பக்கங்கள்: 07

# காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 சித்திரை 17 வெள்ளிக்கிழமை 29.04.2022 கதிர் 69

## திரிபோஷா உற்பத்தி 3 மாதங்கள் நிறுத்தம்

நாட்டில் திரிபோஷா மாவுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

திரிபோஷா பற்றாக்குறை காரணமாகப் போஷாக்கின்மையால் சிறுவர்கள் அதிகம் பாதிப்புக்கு உள்ளாகும் வாய்ப்பு காணப்படுகின்றது.

கர்ப்பிணித் தாய்மார்கள், தமக்கு ஒரு சில மாதங்களுக்கு மாத்திரமே ☞2

# சர்வகட்சிப் பேச்சு திடீரென இரத்து!

## ஜனாதிபதி கோட்டா அதிரடி முடிவு; மஹிந்தவைப் பாதுகாக்க வியூகம்

ஜனாதிபதி மாளிகையில் இன்று முற்பகல் நடைபெறவிருந்த சர்வகட்சி பேச்சு பிற்போடப்பட்டுள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

சர்வகட்சி அரசு தொடர்பில் கலந்துரையாடும் கூட்டத்தில் பங்கேற்குமாறு நாடாளுமன்றத்தில் சுயேச்சையாகச் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உட்பட அரசில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சித் தலைவர்களையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சமீபத்தில் கேட்டுக்கொண்டார். ☞2



## மஹிந்த பதவி துறக்காவிடின் பிரேரணை மூலம் தூக்குவோம்

### அத்துரலிய ரத்ன தேரர் எம்.பி. எச்சரிக்கை

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகாவிட்டால் நம்பிக்கையில்லாப் பிரேரணையின் ஊடாகவே அவர் பதவி விலக நேரிடும்.

- இவ்வாறு அபேஜன பல வேகய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ☞2



## புதிய பிரதமருடன் இடைக்கால அரசு

### ஜனாதிபதி இணக்கம் என்கிறார் மைத்திரி

புதிய பிரதமர் உள்ளடங்கலாக சர்வக் கட்சி இடைக்கால அரசை அமைப்பதற்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இணக்கம் வெளியிட்டார் என்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன ☞2



## இந்தியத் தூதருடன் நேற்று சுயாதீன எம்.பிக்கள் பேச்சு



நாட்டின் தற்போதைய பொருளாதார அரசியல் நிலை தொடர்பில் அரசிலிருந்து வெளியேறி சுயாதீனமாகச் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், இந்தியத் தூதுவர் கோபால் பாக்லேயை நேற்று மாலை சந்தித்துக் ☞2

## நெருக்கடிக்குத் தீர்வுகாண அனைவரும் முன்வாருங்கள்



### நாமல் அழைப்பு

ஆளுங்கட்சியினரும், எதிரணியினரும் அரசியல் பேதங்களை ஒதுக்கிவைத்துவிட்டு, மக்களின் பிரச்சினைகளுக்குத் ☞2

## மே 2ஆம் திகதி விசேட விடுமுறை

எதிர்வரும் 2ஆம் திகதி திங்கட்கிழமை அரச விசேட விடுமுறை தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கை ஒன்றை வெளியிட்டு பொது நிர்வாக அமைச்சு இதனைக் குறிப்பிட்டுள்ளது.

## யாழ். நகரில் திருட்டில் ஈடுபட்ட கும்பல் கைது!

யாழ்ப்பாணம் நகரின் பல இடங்களில் இளைஞர்களை அச்சுறுத்திபணம் மற்றும் அலைபேசிகளை அபகரித்த கும்பலைச் சேர்ந்த இருவர் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டனர். ☞2

## பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்ந்தால் ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் நின்று விடும்

### மனோவிடம் மஹிந்த தெரிவிப்பு



இன்று நாட்டில் நிலவுவது பொருளாதார பிரச்சினைதான். எமக்கு நட்பு நாடுகள் உதவும். பிரச்சினைகளுக்கு நாம் பொருளாதாரத் தீர்வு வழங்குவோம். மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்ந்து விட்டால், இந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் ஓய்ந்து போய் விடும். அரசமைப்பு தீர்வு என்பது பெரிய விடயமல்ல. அதனால் பொருளாதாரப் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. 20ஆம் திருத்தத்தை அகற்றி விட்டு 19ஆம் திருத்தத்தை மீண்டும் கொண்டு வருவதாக நான் சொன்னதும், ☞2

## மட்டக்களப்பிலுள்ள ஊடகவியலாளர்களைக் கொலைசெய்ய முயற்சியா?

### பொலிஸாரிடம் காட்டமாக வினவினார் சாணக்கியன் எம்.பி.



மட்டக்களப்பிலுள்ள ஊடகவியலாளர்களைக் கொலை செய்யவா முயற்சிக்கின்றீர்கள் என சிவில் உடையில் ஊடகவியலாளர்களைக் காணொலி எடுத்த பொலிஸாரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மிகவும் காட்டமான முறையில் கேள்வி எழுப்பினார்.

படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் டி.சிவராமின் நினைவு தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் இன்று நினைவேந்தல் நிகழ்வும் கவனவீர்ப்புப் போராட்டமும் முன்னெடுக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியம் மற்றும் மட்டக்களப்பு ஊடக அமையத்தின் ஏற்பாட்டில் நினைவேந்தல் நிகழ்வும், ☞2

## பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்ந்தால் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதற்கு அமைச்சரவையில் சம்மதம் பெற்றதும் உண்மைதான். ஆனால், அதற்கு மேல் அதற்கு என்ன நடந்தது என எனக்கு தெரியாது. ஒருவேளை அது அமைச்சரவை உப குழுவில் இருக்கலாம். அதுபற்றி அவசரப்பட தேவையில்லை. அது சாவகாசமாக வரும்போது வரட்டும். முதலில் மக்களின் பொருளாதாரப்பிரச்சினைகளை நான் தீர்க்கின்றேன். அப்போது இந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் நின்று விடும்.

- இவ்வாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசனிடம், நேற்றிரவு இருவருக்கும் இடையில் நிகழ்ந்த தொலைபேசி உரையாடலின்போது, கூறியுள்ளார்.

இதுபற்றி மனோ கணேசன் எம்.பி. ஊடகங்களுக்குக் கூறியுள்ளவை வருமாறு:-

நேற்றிரவு தொலைபேசியில், சபாநாயகர் மஹிந்த யாப்பாவிடம் பேசி விட்டு, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவைத் தொடர்புகொண்டு, 20ஆம் திருத்தத்தை அகற்றிவிட்டு, 19ஆம் திருத்தத்தைக் கொண்டு வருவதாகச் சொன்னீர்கள். அமைச்சரவையிலும் அனுமதி பெற்றதாகவும் சொன்னீர்கள். ஐக்கிய மக்கள் கூட்டணி சார்பிலும் நாம் அரசமைப்பு திருத்த வரைவை வழங்கியுள்ளோம். அதில் நிறைவேற்று ஜனாதிபதி முறைமை முழுமையாக அகற்றுவது பற்றி கூறப்பட்டுள்ளது. எனினும், அரசின் வரைவுக்கே முதலிடம் கிடைக்கும். 20ஆம் திருத்தத்தை அகற்றும் எல்லா முயற்சிகளுக்கும் நாம் ஆதரவளிப்போம். முதற்கட்டமாக, 20ஐ அகற்றிவிட்டு, 19ஐக் கொண்டு வருவதையும் நாம் ஆதரிப்போம். ஆகவே, நீங்கள் எப்போது உங்கள் சட்ட வரைவை நாடாளுமன்றத்துக்குக் கொண்டு வருகின்றீர்கள்? இது பற்றி சற்றுமுன் சபாநாயகர் மஹிந்த யாப்பாவிடம் பேசினேன். உங்கள் சட்ட வரைவு எப்போது சபைக்கு வரும் என்பது பற்றி, அவர் தனக்கு எதுவுமே தெரியாது என்கிறார் என்று கேட்டேன்.

அதற்குப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, இன்று நாட்டில் நிலவுவது பொருளாதாரப் பிரச்சினைதான். எமக்கு நட்பு நாடுகள் உதவும். பிரச்சினைகளுக்கு நாம் பொருளாதாரத் தீர்வு வழங்குவோம். அரசமைப்பு தீர்வு என்பது பெரிய விடயமல்ல. அதனால் பொருளாதாரப் பிரச்சினைகள் தீரப்போவதில்லை. 20ஆம் திருத்தத்தை அகற்றி விட்டு 19ஆம் திருத்தத்தை மீண்டும் கொண்டு வருவதாக நான் சொன்னதும், அதற்கு அமைச்சரவையில் சம்மதம் பெற்றதும் உண்மைதான். ஆனால், அதற்கு மேல் அதற்கு என்ன நடந்தது என எனக்குத் தெரியாது. ஒருவேளை அது அமைச்சரவை உப குழுவில் இருக்கலாம். அதுபற்றி அவசரப்படத் தேவையில்லை. அது சாவகாசமாக வரும்போது வரட்டும். முதலில் மக்களின் பொருளாதார பிரச்சினைகளை நான் தீர்க்கிறேன் என்று கூறினார்.

அரசமைப்பு திருத்தம் மூலம் நாட்டில் உடனடியாக இறுதித் தீர்வு வராது என்பது எனக்குத் தெரியும். ஆனால், நாட்டில் ஸ்திரத்தன்மை வருமே. அது தீர்வைக் கொண்டு வரும். இன்று மக்கள் நாடு முழுக்கப் போராடுகின்றார்கள்; அவதிப்படுகின்றார்கள். இது உங்களுக்குப் பிரச்சினை இல்லையா? எனத் திருப்பிக் கேட்டேன்.

இல்லை, கவலை வேண்டாம் தம்பி..! மக்களின் பொருளாதாரப் பிரச்சினைகள் தீர்ந்து விட்டால், இந்த ஆர்ப்பாட்டங்கள் எல்லாம் ஓய்ந்து போய் விடும். அதற்குத்தான் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்கப் போகின்றேன். அப்புறம் பாருங்கள், இந்தப் போராட்டங்கள் எல்லாமே முடிவுக்கு வந்து விடும் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறி முடித்தார்.

20ஆம் திருத்தத்தை அகற்றி விட்டு 19ஆம் திருத்தத்தை மீண்டும் கொண்டு வருவதாகவும், அதற்கு அமைச்சரவையில் சம்மதம் பெற்றதாகவும், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சொல்லியிருந்தாலும், இதற்கு அவர் முன்னுரிமை அளிக்கவில்லை என இப்போது தெரிகின்றது. நாட்டில் மக்கள் போராடுவது, உணவு, மருந்து, மின்சாரம், பெற்றோல், எரிவாயு, உரம் போன்ற பொருளாதாரத் தேவைகளுக்காகத்தான் என அவர் உறுதியாக நம்புகின்றார். ஆகவே, அவற்றுக்குத் தீர்வு கண்டால் இந்தப் போராட்டங்கள் எல்லாம் முடிவுக்கு வந்து விடும் என அவர் நம்புகின்றார். இதற்காக அவருக்கு நட்பு நாடுகள் உதவும் எனவும் அவர் நம்புகின்றார்.

ராஜபக்ஷ குடும்பத்தார் மீது சுமத்தப்பட்டுள்ள ஊழல், வீணடிப்பு, தவறான நிதிக்கொள்கை போன்ற விடயங்கள் பற்றி அவர் எதுவும் கூறாவிட்டாலும்கூட, இவை பற்றிய போராட்டங்களையும் கூட அவர் முக்கியமாகக் கருதவில்லை எனத் தெரிகின்றது.

இது பற்றி நேற்றிரவு ஐக்கிய மக்கள் கூட்டணியின் தலைவர் சஜித் பிரேமதாஸவிடம் பேசினேன். இன்று ஏனைய எதிரணிக் கட்சி தலைவர்களிடமும் பேசவுள்ளேன். அனைத்து எதிரணி கட்சிகளும் தங்கள் செயற்பாடுகளை கூட்டிணைக்க வேண்டும் என விரும்புகின்றேன் - என்றார் மனோ கணேசன்.

## யாழ். நகரில் திருட்டில் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று இளைஞர் ஒருவரிடம் 6 ஆயிரம் ரூபா பணம் மற்றும் அலைபேசியை அபகரித்துச் சென்ற நிலையில், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் வழங்கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் வழிப்பறி கொள்ளையில் ஈடுபட்ட இருவர் யாழ். மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்டனர்.

யாழ். மாநகரில் கடந்த ஒரு வாரத்துக்குள் 3 வெவ்வேறு சம்பவங்களில் இளைஞர்களை அச்சுறுத்தி பணம் மற்றும் அலைபேசிகள் அபகரிக்கப்பட்டன.

நூதனமான முறையில் இளைஞர்களை மறித்து தமது சகோதரியுடன் கதைப்பதாகவும், அவருடைய படத்தை பணப்பையில் (பேஸில்) வைத்திருப்பதாகவும் அச்சுறுத்திவிட்டு அவர்களிடமிருந்து அலைபேசி மற்றும் பணத்தை அபகரித்து கும்பல் தப்பித்து வந்துள்ளது.

இந்தநிலையில், 4ஆவது சம்பவமாக யாழ்ப்பாணம் பழைய பூங்கா வீதியில் இளைஞர் ஒருவரை அதே பாணியில் அச்சுறுத்தி 6 ஆயிரம் ரூபா பணம் மற்றும் பெறுமதியான அலைபேசியை இருவர் அபகரித்துச் சென்றனர்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞரால் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினர், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 22 மற்றும் 24 வயதுடைய இருவரைக் கைதுசெய்தனர்.

சந்தேகநபர்களிடமிருந்து 6 ஆயிரம் ரூபா பணம் மற்றும் இரண்டு அலைபேசிகள் கைப்பற்றப்பட்டன. விசாரணைகளின் பின்னர் சந்தேகநபர்கள் இருவரும் நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக யாழ். பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

## மட்டக்களப்பிலுள்ள .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
போராட்டமும் நடைபெற்றன.

இலங்கையில் படுகொலைசெய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டியும் நாட்டில் இடம்பெற்றுவரும் ஊடகவியலாளர்களுக்கு எதிரான அடக்குமுறையைக் கண்டித்தும் தமிழ் மக்களின் உரிமையை அங்கீகரிக்கக் கோரியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டத்தில் ஈடுபட்ட ஊடகவியலாளர்களை சிவில் உடையில் வருகை தந்திருந்த பொலிஸார் கமராக்களின் உதவியுடன் காணொலியாகப் பதிவு செய்திருந்தனர்.

இதன்போது கோபமடைந்த இரா. சாணக்கியன் எம்.பி., மட்டக்களப்பிலுள்ள ஊடகவியலாளர்களைக் கொலை செய்யவா முயற்சிக்கின்றீர்கள் எனக் கேள்வி எழுப்பினார்.

## நெருக்கடிக்குத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தீர்வைத் தேட முன்வர வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளார் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர், மேலும் கூறியதாவது:-

தற்போதைய சூழ்நிலையில் முதலில் நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அப்போதுதான் பொருளாதாரப் பிரச்சினைக்குத் தீர்வை தேடலாம். இது குறித்து அரசியல் கட்சிகள் சிந்திப்பதாகத் தெரியவில்லை.

'கோ ஹோம் கோட்டா' என ஒரு புறத்தில் போராட்டம் நடக்கின்றது, எதிர்க்கட்சி பாதயாத்திரை செல்கின்றது. ஆளுங்கட்சியினர் பிளவுபட்டு 113 என்ற எண்கணித அரசியலில் ஈடுபடுகின்றனர். இவற்றால் நாட்டில் ஏற்பட்டுள்ள பிரச்சினை தீரப் போவதில்லை.

எனவே, அரசியல் நிகழ்ச்சி நிரலை ஒதுக்கிவைத்துவிட்டு, நாட்டில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த அனைத்துக் கட்சிகளும் முன்வரவேண்டும்.

மூளை பிரச்சினையெனில் உடல் வலிக்கு மருந்து எடுத்துப் பயன் இல்லை. நாட்டில் தற்போது அவ்வாறான நடவடிக்கைதான் இடம்பெறுகின்றது - என்றார்.

## இந்தியத் தூதருடன் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கலந்துரையாடியுள்ளனர்.

இலங்கைக்குத் தேவையான ஒத்துழைப்புகளை இந்தியா தொடர்ச்சியாக வழங்கும் எனத் தூதுவர் இதன்போது கூறினார் என்று இந்திய உயர்ஸ்தானிகராலயம் ருவிட்டரில் பதிவிட்டுள்ளது.

நெருக்கடியான நிலையில் இலங்கையுடன் தொடர்ச்சியாகக் கைகோர்த்துள்ளமை குறித்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்திய மக்களுக்கு இதன்போது நன்றி தெரிவித்துள்ளனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சுயாதீனக் குழு, முன்னாள் அமைச்சர் உதய கம்மன்பில மற்றும் டிரான் அலஸ் ஆகியோர் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

மேற்படி சுயாதீன நாடாளுமன்ற உறுப்பினர்களை இலங்கைக்கான சீனத் தூதுவரும் அண்மையில் சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய பிரதமருடன் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்தார்.

கொழும்பில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இந்த தகவலை வெளியிட்டார்.

அரசுக்கான ஆதரவை விலக்கிக் கொண்டு நாடாளுமன்றத்தில் சுயாதீனமாக செயற்படும் 11 கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும், ஜனாதிபதிக்கும் இடையிலான சந்திப்பு இன்று முற்பகல், ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

இதன்போது நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை, சர்வக்கட்சி அரசு, அவ்வரசின் தன்மை, பிரதமர், அமைச்சரவை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் விரிவாக அலசி ஆராயப்பட்டுள்ளன.

நாடாளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களை உள்ளடக்கிய வகையில் தேசிய சபையொன்றை நிறுவுவதற்கும், பிரதமர் மற்றும் அமைச்சரவையை நியமிக்கும் பொறுப்பு அந்த சபையிடம் கையளிக்கப்படுவதற்கும் கொள்கையளவில் இணங்கப்பட்டது.

தற்போதைய பிரதமர் அல்லாமல் புதிய ஒருவருடன் சர்வக்கட்சி இடைக்கால அரசமைப்பதற்கு ஜனாதிபதி இணக்கம் வெளியிட்டார். இது சம்பந்தமாக தெளிவுபடுத்தி அனைத்து கட்சிகளுக்கும் ஜனாதிபதி தரப்பிலிருந்து கடிதம் அனுப்பப்படும்.

15-20 இற்கும் இடைப்பட்டதாகவே அமைச்சரவை இருக்க வேண்டும். தேசிய சபையொன்று நிறுவப்படும் - எனவும் மைத்திரிபால சிறிசேன கூறினார்.

அதேவேளை, ஜனாதிபதியும், பிரதமரும் பதவிவிலகும்வரை எந்தவொரு ஆட்சி கட்டமைப்பையும் ஏற்கப்போவதில்லை என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியும், தேசிய மக்கள் சக்தியும் அறிவித்துள்ளன.

## மஹிந்த பதவி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அத்துரலிய ரத்ன தேரர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலகாமல் நாட்டை நெருக்கடியான நிலைக்கு மாற்ற முயற்சிப்பார் நான் நினைக்கவில்லை.

பிரதமர் பதவி விலகாவிட்டால் மக்கள் தொடர்ந்தும் போராட்டத்தில் ஈடுபட நேரிடும் - என்றார்.

## சர்வகட்சிப் பேச்சு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்நிலையில், நேற்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடனான சந்திப்பின்போது ஆளுங்கட்சி சார்பாக 109 எம்.பிக்கள் கலந்துகொண்டமையைத் தொடர்ந்து, பிரதமருக்கு ஆதரவாக 117 எம்.பிக்களின் ஆதரவு இருப்பது உறுதியாகியுள்ளது என நம்பப்படுகின்றது.

இதையடுத்து, இன்று நடைபெறவிருந்த சர்வகட்சிகளுடனான சந்திப்பை ஜனாதிபதி திடீரென ஒத்திவைத்துள்ளார். சுயேச்சையாக இயங்கும் சிலருடன் மாத்திரம் அவர் பேச்சு நடத்தினார்.

## திரிபோஷா உற்பத்தி .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
திரிபோஷா வழங்கப்பட்டது எனத் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, திரிபோஷா உற்பத்திக்கான மூலப்பொருள்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதன் காரணமாக திரிபோஷா உற்பத்தி மூன்று மாதங்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது என லங்கா திரிபோஷ நிறுவனம் தெரிவித்துள்ளது.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
தொலைபேசி இலக்கம்-
076 443 8622

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நிரூபித்துக் காட்டுங்களேன்!

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை யாருக்கு என்ற ஒரு பிரச்சினை ஓடிக்கொண்டிருக்கின்றது என்றால், மறுபுறம் அரசுக்கும் அரசுத் தலைவருக்கும் எதிரான மக்கள் கிளர்ச்சி விஸ்வரூபம் எடுத்து வருகிறது.

இரண்டும் வெவ்வேறான பிரச்சினைகள். வெறுமனே நாடாளுமன்றப் பெரும்பான்மை யாருக்கு என்ற சர்ச்சைக்கு முடிவு காண்பதனாலோ அல்லது இடைக்கால அரசு ஒன்றைச் சமாளிப்பு ஏற்பாடாக முன்னெடுப்பதனாலோ மக்களின் அதிருப்தியால் எழுந்துள்ள கிளர்ச்சி – எழுச்சி – சீற்றம் – அடங்கி விடப்போவதில்லை. இருக்கும் அரசு அதிகாரத்திலிருந்து அகற்றப்படுகிறது என்பது சில சமயம் கிளர்ந்துள்ள மக்கள் எழுச்சியின் வீறைச் சற்றுத் தணிக்கக் கூடும். அவ்வளவுதான். முட்டாள்தனமான முடிவுகளை மேற்கொண்டு, மோசமான நிர்வாகத்தை நடத்தி, நாட்டையே குட்டிச்சுவராக்கித் தேய்த்தழித்திருக்கும் இந்த ஜனாதிபதி அதிகாரத்தில் இருக்கும் வரை – அவரின் கீழான அரசு ஒன்று நீடிக்கும் வரை – இந்த மோசமான நெருக் கடியிலிருந்து நாடு மீளும் வாய்ப்பில்லை என்பது தான் 'கோட்டோ கோ ஹோம்' போராட்டம் நடத்தும் சுயாதீன இளைஞர்களின் ஒற்றை நிலைப்பாடாகும்.

அந்தப் பிரச்சினைக்கு வேறு வடிவத்தில்தான் தீர்வு கண்டாக முடியும்; கண்டாக வேண்டும். நாடாளுமன்ற சர்ச்சையைப் பொறுத்தவரை அரசுத் தலைவர்களின் பேச்சும் கருத்தும் நிலைப்பாடும் ஒற்றைப் பட்டதாக இருப்பின் – நாக்கை புரட்டிப்போட்டு பேசும் குத்துக்கரணை நிலைப்பாடாக இல்லாவிட்டால் – தீர்ப்பது மிகவும் சுலபம்.

பிரதமர் பத்திரிகை பேட்டிகளிலும் பேச்சுக்களிலும் திரும்பத் திரும்ப ஒரே விடயத்தைக் கூறி வருகின்றார். நாடாளுமன்றத்தில் தனக்குப் பெரும்பான்மை இருப்பதாக அவர் அறுதியிட்டுக் கூறுகின்றார். யாரும் இது குறித்து சந்தேகப்படத் தேவையில்லை என்கிறார் அவர். நேற்று நடைபெற்ற மொட்டுக் கட்சி நாடாளுமன்றக் குழுக் கூட்டத்திலும் அதைத்தான் அவர் சொல்லியிருக்கின்றார்.

நாடாளுமன்ற பெரும்பான்மை என்ற 113 உறுப்பினர்களின் ஆதரவுதான் இங்கு சர்ச்சை என ஜனாதிபதியும் கூட அந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இடைக்கால அரசை அமைக்கக் கோரும் தரப்புக்களும் கூட நாடாளுமன்றத்தில் பிரதமருக்கு பெரும்பான்மை இல்லை, அவரை வீட்டுக்கு அனுப்புவோம், நம்பிக்கையில்லாப் பிரேரணை மூலம் அவர் அரசைக் கலைப்போம் என்றெல்லாம் வீரப் பிரதாப அறிக்கைகளை – அறிவிப்புக்களை – விட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அவற்றை அவர்கள் செய்வதற்கு கொஞ்சநாள் பிடிக்கலாம். அதுவரையில் தேவையற்று இச்சர்ச்சை இழுபடும்.

வரும் 4ஆம் திகதி – புதன்கிழமை – நாடாளுமன்றம் கூடும் போது, நிலையியல் கட்டளைகளை இடைநிறுத்தி – 'எனது இந்த அரசு மீது நாடாளுமன்றத்திற்கு நம்பிக்கை இருக்கிறது' எனத் தெரிவிக்கும் ஒரு வரிப் பிரேரணையை பிரதமரே நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து, குறுகிய விவாதத்தோடு அதன் மீது வாக்கெடுப்பு நடத்தச் செய்தால் ஒரே நாளில் பிரச்சினைக்கு முடிவு கிட்டி விடும்.

எப்போதும் 'கணக்குப்பிள்ளை பேசக்கூடாது; கணக்குப் புத்தகம் பேச வேண்டும்' என்பார்கள்.

நமது அரசியல்வாதிகளோ கணக்குப் புத்தகத்தைப் பேசவிடாமல் தாங்கள் கணக்கு விட்டுக் கொண்டிருக்கின்றார்கள் – வாய்ச்சவடால் மூலம்.

தனக்குப் பெரும்பான்மைப் பலம் நாடாளுமன்றத்தில் இன்னமும் உள்ளது என்பதை அறுதியிட்டு கூறும் பிரதமருக்கு, அது உண்மை என்பதை ஒரேநாளில் நிரூபித்துக்காட்ட வாய்ப்பு இருக்கும்போது அதைச் செய்யாமல் அவர் ஏன் ஓடி ஒளிய வேண்டும்?

# கோட்டாபயவின் செல்வாக்கு மக்கள் மத்தியில் பாரிய வீழ்ச்சி

## சுகாதார கொள்கை நிறுவனம் கருத்துக்கணிப்பு

தற்போதைய பொருளாதார நெருக்கடி நாட்டிலுள்ள அனைத்து அரசியல்வாதிகள் மீதும் பொதுமக்களின் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளதாக சுகாதார கொள்கை நிறுவனம் நடத்திய கருத்துக்கணிப்பில் தெரியவந்துள்ளது.

அரசாங்க மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகளுக்கு மக்கள் மத்தியில் இருந்து ஆதரவு சரிந்துள்ளது என்பதை இந்த கருத்துக்கணிப்பு உறுதிப்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு மக்கள் மத்தியில் இருந்து ஆதரவு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதன்படி, 2021 ஓகஸ்ட் முதல் செப்ரெம்பர் வரை நாடு மூடப்பட்டிருந்த காலகட்டத்தில், ஜனாதிபதியின் புகழ் 2022 ஏப்ரலில் பிளஸ் 50 இலிருந்து - 80 குறைந்துள்ளது.

செப்ரெம்பர் 2021 முதல் அரசியல்வாதிகள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனங்களில் தொடர்புடைய கருத்துக் கணிப்புகள் நடத்தப்பட்டன. அதிலிருந்து ஜனவரி 2022 வரை, ஜனாதிபதி ஓர் உயர் மட்ட பிரபலத்தை தக்க வைத்துக் கொண்டார்.

இதற்கு மாறாக, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் புகழ் பெரும்பாலும் எதிர்மறையாகவே உள்ளது. ஆனால், கடந்த இரண்டு மாதங்களில் எல்லாம் மாறி, ஜனாதிபதியின் செல்வாக்கு சரிந்துவிட்டது.

ஜனாதிபதியின் புகழ் பெப்ரவரியில் பிளஸ் 20 ஆக இருந்து ஏப்ரல் முதல் மூன்று வாரங்களில் -80 ஆகக் குறைந்துள்ளது என்று அறிக்கை குறிப்பிடுகிறது.

மார்ச்–ஏப்ரல் காலத்தில், ஜனாதிபதியின் புகழ் (-40) பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ (-33) மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாஸ(-26) ஆகிய இருவரையும் விடக் குறைந்துள்ளது.

ஏழைகள், பெண்கள், நகர்ப்புற மற்றும் சிங்கள முதியவர்கள் மத்தியில் ஜனாதிபதியின் பிரபல்யத்தில் மிகப்பெரிய சரிவு ஏற்பட்டுள்ளதாகக் கருத்துக் கணிப்பு தெரிவிக்கிறது.

கலாநிதி சுதர்னி பெர்னாண்டோபுள்ளே மற்றும் ரணில் விக்கிரமசிங்க மற்றும் அநுரகுமார திஸாநாயக்க போன்றவர்களின் செல்வாக்கு வீழ்ச்சியடைந்துள்ளது.

சுகாதார அமைச்சகம், ஆயுதப்படை, அரசு மருத்துவ அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட அரசு நிறுவனங்கள் மற்றும் பிற அமைப்புகளின் செல்வாக்கு சற்று குறைந்துள்ளது, மேலும் மக்களின் அதிருப்தி குறிப்பாக அரசியல்வாதிகள் மத்தியில் அதிகரித்துள்ளதை கருத்துக்கணிப்பு மேலும் உறுதிப்படுத்துகிறது.

# உணவுக்கு நெருக்கடியை விரைவில் மக்கள் சந்திப்பர்!

## விவசாய நிபுணர்கள் எச்சரிக்கை

விவசாயிகளின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் உள்ளூர் உணவு உற்பத்தியை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்காவிட்டால் இந்நாட்டு மக்கள் விரைவில் உணவு நெருக்கடியை சந்திக்க நேரிடும் என விவசாய நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டில் நெல் அறுவடை 45 வீதத்துக்கும் அதிகமாகக் குறைந்துள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பல்வேறு பகுதிகளில் யூரியா உரத்தின் விலை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடைகளில் 50 கிலோ யூரியா உர மூடை 40 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

# முல்லைத்தீவு மாணவர்கள் மத்தியில் போதைப்பொருள் பாவனை அதிகரிப்பு

முல்லைத்தீவு வலயப் பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் மாணவர்கள் பாடசாலையில் ஒருவித போதை பொருள் பாவனைக்கு அடிமையாகி உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் தெரியவருவதாவது –

முல்லைத்தீவில் உள்ள பிரபல்யமான பாடசாலை ஒன்றில் தரம் 10 மற்றும் 11 இல் கல்வி பயிலும் மாணவர்களே இவ்வாறு பாடசாலையில் வைத்து ஒருவித போதை பொருளை நுகர்வது கண்டறியப்பட்டுள்ளது.

மேற்படி மாணவர்கள் புகைத்தல் பொருள்கள் பாதுகாப்பாக அடைத்துவரும் வெள்ளை மற்றும் மஞ்சள் கலந்த தாளில் ஒருவகையான தூள் கலந்த பொருளை சூடேற்றி அதிலிருந்து வெளிவரும் புகையை மணக்கும் செயற்பாடு தொடர்ச்சியாக பாடசாலையில் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் தொடர்பில் பாடசாலை நிர்வாகத்துக்கு தெரிந்த நிலையிலும் அவர்கள் இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்கத் தயங்கி வருகின்றனர் என அறியக் கிடைத்துள்ளது.

மேற்படி பாடசாலையில் பெண் மாணவிகளும் கல்வி கற்கின்ற நிலையில் ஒரு சில ஆண் மாணவர்களின் செயற்பாடுகளால் ஏனைய மாணவர்களுக்கும் அசௌகரியத்தை ஏற்படுத்துவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அண்மையில் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி பயிலும் 20 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் தமது கைகளை பிளேட்டினால் வெட்டிய பின்னணியில் போதைப் பொருள் பாவனையே இருப்பதாகக் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

ஆகவே எதிர்கால சந்ததியினரின் நலன் கருதி மேற்படி பாடசாலையில் இடம்பெறும் செயற்பாடுகளை நிறுத்துவதற்கு உரிய தரப்பினர் தலையீடு செய்வது காலத்தின் தேவையாகும்.

# டொலரின் மதிப்பு 500 ரூபாவை எட்டும் முன்னாள் கணக்காய்வாளர் எச்சரிக்கை

இந்த ஆண்டின் இறுதிக்குள் அமெரிக்க டொலரின் மதிப்பு 500 ரூபா வரை அதிகரிக்கலாம் என முன்னாள் கணக்காய்வாளர் காமினி விஜேசிங்க எச்சரித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை சீர்செய்வது தொடர்பாகக் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். நாட்டின் தற்போதைய கடன் நிலை, அரசாங்கம் தனது கடமைகளில் தவறியிருப்பதையே காட்டுகிறது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார். நெருக்கடியால் பாதிக்கப்பட்ட தேசத்தை மீண்டும் கட்டியெழுப்ப ஒரு புதிய வேலைத்திட்டத்தின் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார். நாடு வங்குரோத்து நிலையில் இருப்பதை அரசாங்கம் இப்போது உணர்ந்து கொள்வது மிகவும் அவசியமானது என காமினி விஜேசிங்க மேலும் தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



### ரஷ்யா–உக்ரைன் இடையேயான போரை முடிவுக்கு கொண்டு வருவதில்

# ஐ.நா.பாதுகாப்புக் கவுன்சில் தோல்வி; ஐ.நா. பொதுச் செயலாளர் வேதனை




ரஷ்யா-உக்ரைன் இடையேயான போரை முடிவுக்கு கொண்டு வருவதில் ஐ.நா.பாதுகாப்புக் கவுன்சில் தோல்வி அடைந்து விட்டதாக அதன் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார். உக்ரைன் மீது ரஷ்யாவின் போர் நடவடிக்கை 2 மாதங்களை தாண்டியும் தொடர்ந்து வருகிறது. இந்த நிலையில் உக்ரைன் சென்றுள்ள அவர், தலைநகர் கீவ்வில் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது, இருநாடுகள் இடையே போரை தடுக்கவும், அதை முடிவுக்கு கொண்டு வருவதற்கும், அனைத்து முயற்சிகளையும் செய்ய தவறி விட்டது ஏமாற்றம் அளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்து, தென் கிழக்கு உக்ரைன் நகரமான மரியுப்போலில் போராளிகளும் பொதுமக்களும் பதுங்கி இருக்கும் எஃகு ஆலையை விட்டு அவர்களை வெளியேற்றுவதற்கான விவாதங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன என கூறினார். மேலும் அவர் பேசியதாவது,'21வது நூற்றாண்டில் போர் என்பது ஏற்க முடியாத ஒன்று. கட்டடங்களில் வாழ்ந்த அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர். போரில் ஆயிரக்கணக்கான மக்கள் உயிர் பறிபோனது. இந்த துயரம் பற்றி உலக மக்கள் சிந்திக்க வேண்டும். உலகில் போர் மூண்டால் மடிந்து போவது அப்பாவி மக்கள் மட்டுமே,'என்றார்.

இதனிடையே உக்ரைன் கீவ் நகரில் உள்ள குடியிருப்புகள் மீது ரஷ்ய படைகள் ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளது ஐ.நா. சபையை அவமதிக்கும் செயல் என்று உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார். ஐ.நா.பொதுச் செயலாளர் வருகை தந்துள்ள நிலையில், கீவ் பகுதி மீது ஐந்து ஏவுகணைகள் பறந்து வந்து தாக்கியதாகவும், இது ஐ.நா.அமைப்பு உள்பட அனைத்து பிரதிநிதித்துவத்தையும் அவமானப்படுத்தும் ரஷ்ய தலைமையின் முயற்சி என்றும் தமது டுவிட்டர் பதிவில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

### 30 பில்லியன் டொலர் மதிப்பிலான ராணுவ உதவிகளை

## உக்ரைனுக்கு வழங்குவதற்கான மசோதா அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றம்

30 பில்லியன் டொலர் மதிப்பிலான ராணுவம் மற்றும் இதர உதவிகளை உக்ரைனுக்கு வழங்குவதற்கான மசோதா அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப் பட்டது. அமெரிக்க அதிபர் ஜோபிடன், அமெரிக்க பிரதிநிதிகள் சபையிடம், உக்ரைனை ஆதரிப்பதற்காக 30 பில்லியன் டொலர் கேட்டு இருந்தார். அத்துடன், ரஷ்யாவின் மீது பொருளாதார தடைகள் மற்றும் ரஷ்யாவின் சொத்துக்களை பறிப்பதற்கான புதிய சட்ட விதிமுறைகளையும் கேட்டு இருந்தார். இந்த நிலையில் அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் உக்ரைனுக்கு 30 பில்லியன் டொலர் மதிப்பிலான ராணுவ உதவி வழங்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதனிடையே ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் ஆண்டானியோ குட்டரஸ், உக்ரைன் தலைநகர் கீவில் நடந்த பேச்சுக்கு பிறகு தென் கிழக்கு உக்ரைன்நகரமானமரியுப்போலில் போராளிகளும் பொதுமக்களும் பதுங்கி இருக்கும் எகு ஆலையை விட்டு அவர்களை வெளியேற்றுவதற்கான விவாதங்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன எனக் கூறினார். தலைநகர் கீவ் அருகே புச்சா நகரில் அப்பாவி மக்கள் கொல்லப் பட்ட இடத்தை அவர் பார்வையிட்டார். உக்ரைன் மீது ரஷ்யாவின் போர் நடவடிக்கை 2 மாதங்களை தாண்டியும் தொடர்ந்து வருகிறது. இந்த போர் நடவடிக்கையால் ஏராளமான மக்கள் உக்ரைனை விட்டு வெளி நாடுகளில் தஞ்சம் அடைந்தனர்.





## சீனாவின் ஹினான் மாகாணத்தில் 4 வயது சிறுவனுக்கு பரவிய H3N8

### பறவை காய்ச்சல்: எச்சரிக்கும் விஞ்ஞானிகள்

இதுவரை விலங்குகள் மற்றும் பறவைகளுக்கு மட்டும் பரவி வந்த H3N8 பறவை காய்ச்சல் சீனாவின் ஹினான் மாகாணத்தில் ஒரு சிறுவனருக்கும் பரவி இருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. 2002ஆம் ஆண்டு H3N8 பறவைக் காய்ச்சல் தொற்று வட அமெரிக்காவில் வாழும் நீர் பறவைகளில் முதன் முதலில் கண்டறியப்பட்டது. இந்த கிருமி பறவைகள், குதிரைகள், நாய்கள், மற்றும் சீல்களை பாதிப்பதாக அறியப்பட்டபோது மனிதர்களுக்கு இதுவரை பரவியதாக தகவல் இல்லை. இந்நிலையில் சீனாவின் ஹெனான் மாகாணத்தை சேர்ந்த 4 வயது சிறுவனுக்கு H3N8 பறவைக்காய்ச்சல் உறுதிசெய்யப்பட்டுள்ளது. இது குறித்து சீனாவின் தேசிய சுகாதார ஆணையம் வெளியிட்டிருக்கும் அறிக்கையில்:

ஏப்ரல் 5ஆம் திகதி காய்ச்சல் உள்ளிட்ட அறிகுறிகளுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சிறுவனுக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் H3N8 பறவைக் காய்ச்சல் தொற்று உறுதி செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது. வீட்டில் வளர்க்கப்பட்டு வரும் கோழிகள் மூலம் சிறுவனுக்கு தொற்று பரவியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

சிறுவனின் உறவினர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட சோதனையில் யாருக்கும் பாதிப்புஏற்படவில்லைஎன்றுகூறியிருக்கும் சீன மருத்துவர்கள் H3N8 கிருமி மக்கள் மத்தியில் பரவும் அபாயம் குறைவாகவே இருப்பதாக கூறியிருக்கின்றனர். இதுவரை பறவைகள் மற்றும் விலங்குகளிடம் மட்டுமே கண்டறியப்பட்ட H3N8 பறவைக் காய்ச்சல் சீனாவில் மனிதர்களுக்கு பரவ தொடங்கி இருப்பது சர்வதேச அளவில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### சீனாவை அடுத்து அமெரிக்காவிலும் பரவும் பறவைக் காய்ச்சல்

## கொலராடோ மாகாணத்தில் ஒருவருக்கு H5N1 கிருமி பரவி இருப்பது கண்டுபிடிப்பு



சீனாவில் நேற்று முன்தினம் புதுவிதமான பறவை காய்ச்சல் கண்டறியப்பட்ட நிலையில், அமெரிக்காவில் நேற்று கோழிப்பண்ணையாளர் ஒருவருக்கு avian influenza எனப்படும் பறவை காய்ச்சல் உறுதி செய்யப்பட்டது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. 2002ம் ஆண்டு H3N8 பறவை காய்ச்சல் தொற்று வட அமெரிக்காவில் வாழும் நீர் பறவைகளில் முதன்முதலில் கண்டறியப்பட்டது. இந்த கிருமி பறவைகள், குதிரைகள், நாய்கள் மற்றும் சீல்களை பாதிப்பதாக அறியப்பட்ட போதும் மனிதர்களுக்கு பரவியதாக தகவல் இல்லை.

இந்த நிலையில் சீனாவின் ஹினான் மாகாணத்தில் 4 வயது சிறுவனுக்கு சமீபத்தில் H3N8 பறவை காய்ச்சல் தொற்று உறுதி செய்யப்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது.

இதனிடையே அமெரிக்காவின் மேற்கு மாநிலமான கொலராடோவில் வசிக்கும் கோழி பண்ணையாளர் ஒருவருக்கு புதிய வகை பறவை காய்ச்சல் தொற்று உறுதி செய்யப் பட்டுள்ளது. அவருக்கு பறவைகள் மற்றும் விலங்குகளை பாதிக்கும் H5N1 என்ற வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளதாக கொலராடோ மாகாண நிர்வாகம் கூறியுள்ளது. உடனடியாக அவரை தனிமைப்படுத்தியுள்ள சுகாதாரத்துறையினர்,

அவருடன் தொடர்பில் இருந்த அனைவரையும் பரிசோதனை வளையத்திற்குள் கொண்டு வந்துள்ளனர்.

தொற்று அறியப்பட்ட மேட்ரோஸ் கவுண்ட்டி பகுதியில் உள்ள கோழி பண்ணைகளில் அமெரிக்க தொற்று நோய் தடுப்பு பிரிவினர் தீவிர சோதனை நடத்தி வருகின்றனர்.

# அரிசி, பருப்பு, பால் பொருள்கள், உயிர் காக்கக்கூடிய மருந்துகளை இலங்கைக்கு அனுப்ப உள்ளோம்

## ஒன்றிய அரசு அனுமதி வழங்குக : முதல்வர் மு.க.ஸ்டாலின்



இலங்கையில் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள தமிழர்களுக்கு உதவிட ஒன்றிய அரசு அனுமதி அளிக்கக்கோரி சட்டப்பேரவையில் தனி தீர்மானம் கொண்டுவரப்பட்டுள்ளது. இலங்கை தமிழர்களுக்கு உதவிட அனுமதி கோரும் அரசினர் தீர்மானத்தை சட்டப்பேரவையில் முன்மொழிந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றினார். அப்போது பேசிய முதல்வர் மு.க.ஸ்டாலின், 'கடல் சூழ்ந்த இலங்கை நாடு, இன்று கண்ணீரால் சூழப்பட்டுள்ளது. ஈழத் தமிழ் மக்களுக்காகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு ஆளுங்கட்சியாக இருந்தபோதும், எதிர்க்கட்சியாக இருந்தபோதும் ஆற்றிய பணிகளை இந்த மாமன்ற உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள்.

'தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்' என்பதைப் போல, (மேசையைத் தட்டும் ஒலி) நம்முடைய இரத்தத்தில், உணர்வில், வாழ்வில் கலந்த ஒரு பிரச்சினையாக இலங்கைப் பிரச்சினை இருந்து வருகிறது. இலங்கையில் வாழக்கூடிய ஈழத் தமிழர் நலன் கருதி அரசியல்ரீதியாகப் பல்வேறு முழக்கங்களை வெவ்வேறு காலக்கட்டங்களில் நாம் முன்வைத்திருக்கிறோம். காலச்சக்கரம் இலங்கை மக்களை அலைக்கழித்து எங்கோ கொண்டு போய் நிறுத்திவிட்டது. இருப்பினும், இன்றைய நாள் மனிதாபிமான அடிப்படையில் நாம் கைகொடுக்க வேண்டும் என்பதே இந்த அரசினுடைய நிலைப்பாடு ஆகும்.

தற்போது இலங்கை நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளுக்கான காரண, காரியத்திற்குள் நான் செல்ல விரும்பவில்லை. அதேநேரத்தில், அங்குள்ள மக்கள் படக்கூடிய துன்பங்கள், துயரங்கள் நம் அனைவருடைய மனதிலும் சோகத்தை உருவாக்கியிருக்கிறது. இலங்கை முழுவதும் எரிபொருள் தட்டுப்பாடு மிகக் கடுமையாக இருக்கிறது. பெற்றோல், டீசலுக்காக வாகனங்கள் பல மணிநேரம் வரிசையிலே காத்திருக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

மண்ணெண்ணெய் வாங்க பொதுமக்கள் 6 மணி நேரம் காத்திருக்க வேண்டிய ஒரு அவல நிலையும் ஏற்பட்டிருக்கிறது.

எரிவாயு சிலிண்டர்கள் கிடைப்பதில் கடு மையான தட்டுப் பாடும் இருக்கிறது.

இதனால் சமையல் செய்வதே சிக்கலுக்குரியதாக மாறியிருக்கிறது என்று செய்திகள் அவ்வப்போது வந்து கொண்டிருக்கின்றன. நாடு முழுவதும் மின்சாரத் தட்டுப்பாடு நிலவுகிறது. அரசு மற்றும் தனியார் அலுவலகங்களும் செயல்பட முடியாத நிலைக்கு ஆளாக்கப்பட்டிருக்கின்றன. பல அத்தியாவசியப் பொருள்களுடைய விலை பன்மடங்கு உயர்ந்து கொண்டே போகிறது. பேருந்துகள், ரயில்கள் ஆகிய போக்குவரத்துச் சேவைகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. பல இடங்களில் அவை நிறுத்தப்பட்டிருக்கின்றன.

இரசாயன உரங்களுக்குத் தடை விதிக்கப்பட்டதால், மலையகப் பகுதிகளில் தேயிலை விளைச்சல் பாதிக்கப்பட்டிருக்கிறது என்ற தகவலும் நமக்கு வருகிறது. இதனால், தேயிலைத் தோட்டங்களில் பணிபுரியக்கூடிய மலையகத் தமிழர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இலங்கை நாடு முழுவதும் உயிர்காக்கும் பல மருந்துகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு உள்ளிட்ட பகுதிகளில் இரசாயன உரம் கிடைக்காதது பெரும் பிரச்சினையாக இருக்கிறது. சாதாரணமாக 1200 ரூபாய்க்குக் கிடைத்த உர மூட்டை தற்போது 32,000 ரூபாய்க்கு விற்பனையாகிறது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன. பால் விலை, பால் பவுடர் விலை, உணவுப் பொருள்கள் விலை என அனைத்தும் பல நூறு மடங்கு உயர்ந்துவிட்ட காரணத்தால் பச்சிளம் குழந்தைகளும் கூட துன்பத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்ற செய்தி கேட்டு நம் நெஞ்சம் பதைபதைக்கிறது. மொத்தத்தில் இலங்கை மக்களின் வாழ்க்கை என்பது மிகமிக மோசமான நிலையை அடைந்துள்ளது.

அண்டை நாட்டுப் பிரச்னையாக இதை நாம் பார்க்க முடியாது. அங்கு யார் ஆட்சியில் இருக்கிறார்கள்; அவர்கள் எத்தகையவர்கள் எனப் பார்க்க இயலாது. அந்த நாட்டு மக்களுக்கு நம்மால் ஆன உதவியை நாம் செய்தாக வேண்டும் என்பதைத் தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

இலங்கையில் இருந்து இத்தகைய செய்திகள் வந்ததுமே, ஈழத் தமிழ் மக்களுக்கு நம்மால் ஆன அனைத்தையும் வழங்குவோம் என்று நான் அறிவித்தேன். பிரதமர் அவர்களை 31-3-2022 அன்று நான் நேரிலே சந்தித்து வலியுறுத்தினேன். அப்போது அதனை அறிந்து இலங்கைத் தமிழர் தலைவர்களும், சில தமிழ் அமைப்புகளும் எனக்கு வைத்த கோரிக்கை, "தனியாகத் தமிழர்களுக்கு மட்டும் உதவி என்று அனுப்ப வேண்டாம்; இலங்கை மக்களுக்கு என்று பொதுவாக அனுப்புங்கள்; மக்களைப் பிரித்துப் பார்க்க வேண்டாம்; அனைத்து இன மக்களும் சேர்ந்துதான் இந்த நெருக்கடியை அனுபவித்துக் கொண்டிருக்கிறோம்" என்று சொன்னார்கள்.

அதைக் கேட்டபோது நான் நெகிழ்ந்து போனேன். என்னால் உணர்ச்சிப் பெருக்கைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதுதான் தமிழர் பண்பாடு. 'பகைவர்க்கும் அருள்வாய் நன்நெஞ்சே' என்பதைப் போல, இலங்கைத் தமிழர்கள் வாழ்கிறார்கள் என்பதற்கு இது எடுத்துக்காட்டு. இந்த நிலையில், ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்காக நாம் உதவிகள் செய்தாக வேண்டும். அந்த வகையில் பின்வரும் அத்தியாவசியப் பொருள்களை வழங்கலாம் எனத் தமிழ்நாடு அரசு முடிவெடுத்துள்ளது. முக்கியமாக, 40 ஆயிரம் டன் அரிசி; இதனுடைய ஒட்டுமொத்த மதிப்பு சுமார் 80 கோடி ரூபாய்; அதேபோல், உயிர் காக்கக்கூடிய 137 மருந்துப் பொருள்கள்; இதன் மதிப்பு 28 கோடி ரூபாய்; குழந்தைகளுக்கு வழங்க 500 டன் பால்பவுடர்; இதன் மதிப்பு 15 கோடி ரூபாய்.

இவற்றையெல்லாம் இலங்கையில் வாழக்கூடிய அனைத்து மக்களுக்கும் நாம் வழங்க நினைக்கிறோம். இவற்றை மாநில அரசு நேரடியாக வழங்க முடியாது. ஒன்றிய அரசின் அனுமதியோடு இலங்கையில் உள்ள இந்தியத் தூதரகம் வழியாகத்தான் வழங்க வேண்டும். இலங்கையில் இத்தகைய நெருக்கடி ஏற்பட்டதுமே, இந்திய அரசிடம் இது குறித்த கோரிக்கையை நான் முன்வைத்தேன். 31-3-2022 அன்று டெல்லி சென்று மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்தபோதும் இதனை நான் வலியுறுத்தியிருக்கிறேன். அதனைத் தொடர்ந்து ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களைத் தொலைபேசியில் தொடர்புகொண்டும் நான் கோரிக்கை வைத்திருக்கிறேன். அவருக்கும் 15-4-2022 அன்று கடிதம் எழுதி நினைவூட்டியிருக்கிறேன்.

இன்றுவரை எந்தத் தகவலும் இல்லை. ஆனால் அங்கு நிலைமை தற்போது மிகவும் மோசமடைந்துள்ளது.


'உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு' என்கிறார் வள்ளுவர். உதவி என்பதும் மனிதாபிமான அடிப்படையில் உடனடி உதவியாக இருக்க வேண்டும். காலத்தே செய்தால்தான் அது உதவி. (மேசையைத் தட்டும் ஒலி) இதனைத்தான் தமிழக மக்களும் எதிர்பார்க்கிறார்கள். இந்த எண்ணத்தை ஒன்றிய அரசுக்குச் சொல்லக்கூடிய வகையில் ஒரு தீர்மானத்தை இந்த மாமன்றத்தில் நிறைவேற்றி அனுப்புவது காலத்தினுடைய கட்டளை என்று அரசு கருதுகிறது. அதனடிப்படையில், கீழ்க்காணும் தீர்மானத்தை நான் இங்கே முன்மொழியக் கடமைப்பட்டிருக்கிறேன்.

### தீர்மானம்

இலங்கையில் தற்போது நிலவிவரும் கடும் பொருளாதார நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் இலங்கை மக்களுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிடும் பொருட்டு, தமிழ்நாடு அரசு அவர்களுக்குத் தேவையான அரிசி, பருப்பு, பால் பொருள்கள் முதலிய அத்தியாவசியப் பொருள்கள் மற்றும் உயிர் காக்கக்கூடிய மருந்துகள் ஆகியவற்றை அனுப்பி வைக்கத் தயாராக உள்ளது என்றும்; இதற்கு ஒன்றிய அரசு தேவையான அனுமதி வழங்க வேண்டும் என்றும் ஒன்றிய அரசிற்கு ஏற்கெனவே மாநில அரசு கடிதம் எழுதியிருக்கிறது. எனினும், இதுகுறித்து ஒன்றிய அரசிடமிருந்து எந்தவிதமான தெளிவான பதிலும் இதுவரை பெறப்படாத நிலை உள்ளது.

தமிழ்நாடு அரசின் கோரிக்கையை ஏற்று இலங்கையில் கடும் இன்னலுக்கு உள்ளாகி இருக்கக்கூடிய மக்களுக்கு உதவக்கூடிய வகையில், உணவு மற்றும் அத்தியாவசிய மருந்துப் பொருள்களை உடனடியாக அனுப்பி வைக்கத் தேவையான ஏற்பாடுகளைச் செய்து, உரிய அனுமதிகளை வழங்க வேண்டும் என்று ஒன்றிய அரசினை இப்பேரவை வலியுறுத்துகிறது.

இந்தத் தீர்மானத்தை கட்சி எல்லைகளைக் கடந்து, கருணை உள்ளத்தோடு அனைவரும் ஒருமனதாக ஆதரிக்க வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன்,' இவ்வாறு அவர் தெரிவித்தார்.



## அனல்மின் நிலையங்களில் ஏற்பட்டுள்ள நிலக்கரி பற்றாக்குறையை போக்க ஒன்றிய அரசு அவசர நடவடிக்கை

நாட்டில் அனல்மின் நிலையங்களில் ஏற்பட்டுள்ள பற்றாக்குறையை போக்க ஒன்றிய அரசு அவசர நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. மாநிலங்களுக்கு போதுமான அளவு நிலக்கரியை சரக்கு ரயில் சேவை மூலம் வழங்குவதை உறுதி செய்யவேண்டும் என ஒன்றிய அரசு தெரிவித்தது. சரக்கு ரயில்களில் அனல்மின் நிலையங்களுக்கு தேவையான நிலக்கரியை எடுத்து செல்ல ஏதுவாக சாதாரண பயணிகள் ரயில்கள் ரத்து செய்யப்பட்டன. நாட்டில் மின் பற்றாக்குறை சீரானதும், ரத்து செய்யப்பட்ட ரயில்கள் மீண்டும் இயங்கும் என ரயில்வேத்துறை தெரிவித்தது.

# உயர்நீதிமன்றங்களின் காலியிடங்களை நிரப்ப முன்னுரிமை வழங்க வேண்டும்

## டெல்லியில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா வலியுறுத்தல்




உயர்நீதிமன்றங்களின் காலியிடங்களை நிரப்ப முன்னுரிமை வழங்க வேண்டும் என டெல்லியில் நடைபெற்று வரும் நீதித்துறை மாநாட்டில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி என்.வி.ரமணா வலியுறுத்தினார்.

ஒன்றுபட்ட முயற்சியின் விளைவாக இந்த ஆண்டு 126 உயர்நீதிமன்ற நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர். விரைவில் மேலும் 50 நீதிபதிகள் நியமிக்கப்பட உள்ளனர் என தலைமை நீதிபதி என்.வி.ரமணா தெரிவித்தார்.

# மருத்துவரின் அனுபவங்கள் கவிதை வடிவில் வெளியீடு






(காரைதீவுநிருபர் சகா)

மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில், வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரனின் ஒரு மருத்துவரின் மருத்துவமனை நாள்கள் கவிதை நூல் வெளியீடு நாளை 30 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு மட்டக்களப்பு பிள்ளையாரடி தமிழ்ச் சங்கக் கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்பு தமிழ்ச்சங்க தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சித மூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு முன்னிலையாக கிழக்குப் பல்கலைக்கழக மேனாள் மொழித்துறைத்தலைவர் பேராசிரியர் செ.யோகராசா , முதன்மை அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன், கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் வைத்திய கலாநிதி.வே. விவேகானந்த ராஜா ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூலாசிரியர் அறிமுக உரையை தேசபந்து மு.செல்வராசா நிகழ்த்த, நூல் வெளியீட்டு உரையை தேசமான்ய விபுல மாமணி வி.ரி.சகாதேவராஜா நிகழ்த்துவார். நயவுரையை அருட்தந்தை அ.அ.நவரெத்தினம் நிகழ்த்த, வாழ்த்துரைகளை டாக்டர்களான புஷ்பலதா லோகநாதன், பா.யூடி ரமேஷ் ஜெயகுமார் ஆகியோர் ஆற்றுவார்கள்.

இந்நிகழ்வின் சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் க.கலாரஞ்சனி, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கு.சுகுணன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நூலின் முதல்பிரதியினை மட்டக்களப்பு தமிழ்ச் சங்க பொருளாளர் தேசபந்து மு.செல்வராசா பெற்றுக் கொள்ளவுள்ளார்.

கதிரவன் த.இன்பராசாவின் ஒருங்கிணைப்பில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் உள்நாட்டு இறைவரித்திணைக்கள சிரேஷ்ட ஆணையாளர் சட்டத்தரணி மு. கணேசராசாவினால் வரவேற்புரையும், கலைக்கோகிலம் நாட்டியப்பள்ளியினால் வரவேற்பு நடனமும் இடம்பெறவுள்ளன.

வைத்தியகலாநிதி இரா. முரளீஸ்வரன் ஒரு சிறந்த மருத்துவ நிருவாகி மட்டுமல்லாமல் ஓர் உன்னத இலக்கியப்படைப்பாளியுமாவார். 1976இல் யாழ்ப்பாணம் நெல்லியடியில் பிறந்து 1985 ஆம் ஆண்டுகளின் பின்னர் மட்டக்களப்பில் வாழ்ந்துவரும் இவர் தனது கல்வியை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியிலும், மருத்துவ பட்டப்படிப்பை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும் மருத்துவ நிர்வாக முதுமாணியை கொழும்பு பல்கலைக்கழகத்திலும் பெற்றுள்ளார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மருத்துவராக2005ஆம்ஆண்டிலிருந்து கடமையை தொடங்கி 2013 ஆம் ஆண்டு கல்முனை ஆதாரவைத்தியசாலை வைத்திய அத்தியட்சகராகி தற்போதுவரை அங்கு தொடர்ந்து பணிபுரிகின்றார். மருத்துவ அனுபவங்களும் கவிதை அனுபவமும் இணைந்த மருத்துவமனை நாள்களைப்பற்றிய கவிதைகள் சேர்ந்த கவிதைத் தொகுப்பாக இந்நூல் வெளியிடப்படவுள்ளது.





# கிழக்கில் சூரிய சக்தி மின் உற்பத்திக்காக இரு ஒப்பந்தங்கள் நேற்றுக் கைச்சாத்து

(ஹஸ்பர்)

செழுமை நோக்கு வேலைத் திட்டத்திற்கு அமைவாக கிழக்கு மாகாணத்தில் இருந்து நூறு மெகா வாட் சூரிய சக்தி உற்பத்தியை தேசிய மின்னழுத்தத்திற்கு புதுப்பிக்கத்தக்க ஆற்றல் ஊக்குவிப்பு கருத்திட்டத்தின் கீழ் இணைப்பதற்கான இரண்டு ஒப்பந்தங்கள் நேற்றுக் காலை கைச்சாத்திடப்பட்டன.

திருகோணமலையில் அமைந்துள்ள ஆளுநர் அலுவலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

மாகாண சபை சார்பில் மாகாண சபையின் பிரதம செயலாளர் துசித பி. வனிகசிங்க மற்றும் கேபிடல் க்ரோப் இன்டர்நேனல் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் ஆர்ப் டச் சிசி (பிரைவேட்) லிமிடெட் ஆகியவற்றின் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இந்தத் திட்டங்களுக்கான முதலீடு 12 கோடி அமெரிக்க டொலர்கள் (சுமார் 4 ஆயிரத்து 200 கோடி ரூபா). மாகாண சபைக்கு சொந்தமான 279 பாடசாலைகள் தவிர்ந்த அனைத்து பாடசாலைகளின் கூரைகளும் மாகாணசபைக்கு சொந்தமான அனைத்து அரச கட்டடங்களின் கூரைகளும் இதற்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இதன் சிறப்பு என்னவென்றால், சம்பந்தப்பட்ட திட்டங்களை செயல்படுத்துவதால் கிடைக்கும் இலாபத்தில் 20 வீதம் அரசுக்கு வரவு வைக்கும் வகையில் இந்த ஒப்பந்தங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

மேலும், இத்திட்டத்திற்காக பயன்படுத்தப்படும் தற்போது பாவிக்காத நிலையில் உள்ள பாடசாலைகள் மற்றும் வைத்தியசாலைகளும் இதன் ஊடாக பயனடையலாம்.

இதேவேளை, இத்திட்டத்திற்கு பயன்படுத்தப்படும் பாடசாலைகளுக்கு இலவச மின்சாரம் வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதில் ஆளுநரின் செயலாளர் எல்.பி. மதநாயக்க, மாகாண சபையின் பிரதம சட்ட அதிகாரி தர்ஷன வீரசேகர உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# கஞ்சிகுடிச்சாறு மீனவருக்கு தோணிகள் வழங்கி வைப்பு





(காரைதீவு நிருபர் சகா)

அமெரிக்க அன்பு நெறி அமைப்பின் நிதி உதவியில் திருக்கோவில் கஞ்சிகுடிச்சாறு மீனவர்களுக்கு மீன்பிடி தோணிகள் வழங்கி வைக்கப்பட்டன.

திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட கஞ்சிகுடிச்சாறு மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் முகமாக அன்பு நெறி அமெரிக்கா எனும் அமைப்பின் நிதி அனுசரணையில்கஞ்சிகுடிச்சாறுமீனவர்களுக்கு மீன் பிடி தோணிகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் திருக்கோவில் பிரதேசசெயலாளர் த.கஜேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வானது கஞ்சிகுடிச்சாறு மீனவர் சங்க கட்டட வளாகத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் 25 மீன் பிடித் தோணிகள் மீனவர்களிடம் கையளிக்கப்பட்டன.

இந் நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் மற்றும் கனடாவில் இருந்து வருகை தந்த சர்வதேச ஐக்கிய மகளிர் சம்மேளனத்தின் உறுப்பினர் சுபாங்கி சிவானந்தராஜா, உதவிப்பிரதேச செயலாளர் க.சதிசேகரன் அப்பகுதி கிராக சேவையாளர் மற்றும் அபிவிருத்தி உத்தியோத்தர், மீன் வளப்பு அபிவிருத்தி உத்தியோத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். அவர்கள் மீன் பிடி தோணிகளை மீன்பிடித்தல் தொழில் செய்யும் மீனவ மக்களிடம் கையளித்தனர்.

# கிராமப்புற மக்களுக்கும் விரைவாக வைத்திய சேவைகள் கிட்ட வேண்டும்

## கிழக்கு சுகாதார செயலர் வலியுறுத்து

(பைல் இஸ்மாயில்)

நகர்ப்புறங்களில் வாழுகின்ற மக்கள் பெருமளவில் வைத்திய சேவைகளை மிக இலகுவாகப் பெற்று வருகின்றனர். ஆனால் கிராமப்புறங்களில் வாழுகின்ற மக்கள் உரிய நேரத்தில் வைத்திய சேவைகளைப் பெறுவதில் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்று கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நிதியின் (PSDG) ஒன்றரைக் கோடி ரூபா நிதியொதிக்கீட்டின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட சீனக்குடா ஆரம்ப பராமரிப்பு வைத்திய நிலையத்தை மக்கள் பாவனைக்கு கையளித்து வைக்கும் நிகழ்வு கடந்த செவ்வாயன்று திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் டி.ஜீ.எம்.கோஸ்த்தா தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் திருமதி ஜே.ஜே.முரளிதரன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு ஆரம்ப பராமரிப்பு வைத்திய நிலையத்தைத் திறந்து வைத்து மக்கள் பாவனைக்கு கையளித்து வைத்ததன் பின்னர், அங்கு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மக்கள் ஆரோக்கியமுள்ளவர்களாக வாழவேண்டும் என்ற நோக்கில் அரசாங்கம் பல திட்டங்களை முன்வைத்து சகல முன்னெடுப்புக்களையும் மேற்கொண்டு வருகின்றது. கிராமப்புறங்களில் வாழுகின்ற மக்களின் காலடியில் வைத்திய சேவைகள் மிக இலகு வாக சென்றடைய வேண்டும் என்பதற்காகவே ஆரம்பப் பராமரிப்பு வைத்திய நிலையங்களை நிர்மாணித்து, அங்கு வைத்தியர்கள் மற்றும் ஊழியர்களை நியமித்து, பொதுமக்களின் கைகளில் பாவனைக்குக் கையளித்து வைத்து வருகின்றோம். – என்றார். இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஏ.ஆர்.எம்.தௌபீக், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் உதவிப் பணிப்பாளர் வைத்தியர் மோகன குமரன், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிமனையின் திட்டமிடல் வைத்திய அதிகாரி வைத்தியர் வி.குகேந்திரன், இந்த வைத்தியசாலையின் வைத்திய பொறுப்பதிகாரி வைத்தியர் திருமதி ஆர்.முஜீஸ் உள்ளிட்ட மாகாண திணைக்கள அதிகாரிகள், வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# பொருத்தமானவரின் பெயரைப் பரிந்துரைத்தால் பிரதமர் மஹிந்த பதவி விலகுவதற்குத் தயாராம்!

## ஓமல்பே சோபித தேரர் கூறுகிறார்

பிரதமர் பதவிக்கு பொருத்தமான ஒருவரது பெயரை பரிந்துரை செய்தால் தான் பதவி விலக தயார். ஜனாதிபதியின் அதிகாரத்துக்கமைய நாட்டின் அரச நிர்வாகத்தை முன்னெடுக்க முடியாது என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார் என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமை தொடர்பில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற பேச்சைத் தொடர்ந்து ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

பதவி விலகுகிறேன், பதவி விலக தயாராகவுள்ளேன் எவ்வித பிரச்சினையும் கிடையாது. இருப்பினும் பதவி விலகியதை தொடர்ந்து பிரதமர் பதவிக்கு ஒருவரை நியமிக்க தாமதம் ஏற்படுமாயின் நாட்டில் அரச நிர்வாகம் இல்லாமல் போகும். இடைவெளியை நிரப்புவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும். அக்காலப்பகுதியில் நாடு முழுமையாக அழிவு நிலைக்கு செல்லும் என பிரதமர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி வசமுள்ள நிறைவேற்று அதிகாரத்துக்கமைய நாட்டின் அரச நிர்வாகத்தை முன்னெடுத்து செல்ல முடியும் என பிரதமரிடம் குறிப்பிட்டோம். ஜனாதிபதியின் அதிகாரத்துக்கமைய நாட்டை முன்னெடுத்து செல்ல முடியாது. பிரதமர் உட்பட அரசாங்கம் பதவி விலகினால் நாடு ஸ்திரத்தன்மையை இழக்கும்.

நாடு ஸ்திரத்தன்மையை இழந்தால் தற்போதைய நிலைமை பாரதூரமான விளைவுகளுக்கு கொண்டு செல்லும் என பிரதமர் தொடர்ந்து குறிப்பிட்டார். நான் பதவி விலகத் தயார் , சந்தேகம் கொள்ள வேண்டாம்.

நாடாளுமன்றில் உள்ள சகல கட்சிகளையும் ஒன்றிணைத்து முன்னெடுக்கப்பட வேண்டிய அடுத்தக்கட்ட நகர்வு தொடர்பில் ஆராயுங்கள் எனக் குறிப்பிட்டார்.

# வர்த்தக அமைச்சு செயலாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்!

வர்த்தக அமைச்சின் செயலாளர் ஜே.எம் .பி.ஜயவர்தன உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் பதவியில் இருந்து நீக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதியால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜே.எம்.பி.ஜயவர்தன வர்த்தக அமைச்சின் செயலாளராக இருப்பதுடன், பலநிறுவனங்களின் தலைவராகவும் மேலும் பல நிறுவனங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் இருந்துள்ளார். இந்நிலையில், ஜே.எம்.பி.ஜயவர்தனவை செயலாளர் பதவியிலிருந்து நீக்குமாறு முன்னாள் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தொடர்ந்தும் கோரிக்கை விடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. இதேவேளை, வர்த்தக அமைச்சின் புதிய செயலாளராக நீல் பண்டார ஹபுஹின்ன நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுகாதார அமைச்சுக்கு முன்னாள் ஆர்ப்பாட்டம்

## போக்குவரத்து தடை

மருதானையில் அமைந்துள்ள சுகாதார அமைச்சிற்கு முன்னாள் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டமையால் வீதியின் போக்குவரத்து தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஆர்ப்பாட்டக்காரர்கள் வீதியை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதால் இவ்வாறு போக்கு வரத்து தடைப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# இரத்தம் வழங்குவதில் இதுவரை சிக்கலில்லை

## தேசிய இரத்த வங்கி அறிவிப்பு

அவசர சத்திர சிகிச்சை உட்பட இரத்தம் தேவைப்படுகின்ற அனைத்து நோய்களுக்கும் தேவையான இரத்தத்தின் அளவு தற்போது கையிருப்பில் உள்ளதாக தேசிய இரத்த வங்கியின் இயக்குநர் வைத்தியர் லக்ஷ்மன் எதிரிசிங்க தெரிவித்துள்ளார்.

‘தேசிய இரத்த மாற்றும் விநியோக முகாமைத்துவம்’ எனும் தொனிப்பொருளில் அரசாங்க தகவல் திணைக்களை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

நாடு 100 வீதம் இறக்குமதி பொருள்களை சார்ந்து இருக்கும் நிலையில் ஏற்பட்டுள்ள அந்நிய செலாவணி பற்றாக்குறை காரணமாக தேசிய இரத்த விநியோகத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படலாம். ஆனால் இது வரையில் இரத்த விநியோகம் பூச்சிய அளவை எட்டவில்லை. இருப்பினும் கையிருப்பு அளவு குறைந்து வருகிறது.

நன்கொடையாளர்களிடமிருந்து கிடைக்கப்பெறும் இரத்தத்தைப் பெற நான்கு வகையான இரத்தப்பக்கெட்டுகள் பயன்படுத்தப்படுகின்றன. ஏனையவை குழாய்கள் காணப்படுவதால் ஒரு மாதம் அல்லது ஒன்றரை மாதங்கள் இதை முறையாக நிர்வகிக்கலாம்.

இந்நிலையில் விபத்துகள், அவசர அறுவை சிகிச்சைகள், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகள், தலசீமியா நோயாளிகள் மற்றும் உயிருக்கு ஆபத்தான நோயாளிகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டு விநியோகங்கள் இடம்பெறுகின்றன.

நாட்டில் ஆண்டு ஒன்றுக்கு சுமார் 4 லட்சம் இரத்த அலகுகள் தேவைப்படுகின்றன. மேலும் நாளொன்றுக்கு 1200–1400 இரத்த அலகுகள் தேவைப்படுகின்றன.

மறுப்புறம் நாளொன்றுக்கு சுமார் 1000 பேர் வரையில் இரத்த தானம் செய்கிறார்கள். – என்றார்.

# ஊடகவியலாளர் சமுதித்த வீடு மீது தாக்கு: சி.ஐ.டி விசாரணைக்கு நீதிமன்றம் உத்தரவு

ஊடகவியலாளர் சமுதித்த சமரவிக்ரமவின் வீட்டின் மீது, முகத்தை முழுமையாக மறைத்துக்கொண்டு வெள்ளை வானில் வந்த அடையாளம் தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்த விசாரணைகளை உடனடியாக, சி.ஐ.டி. எனும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் கையளிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது. கெஸ்பேவ நீதிவான் தமிந்த ராமநாயக்க வெலிகொடபிட்டிய இதற்கான பொலிஸ் மா அதிபருக்கு பிறப்பித்தார்.

இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட தரப்பான ஊடகவியலாளர் சமுதித்தவுக்காக மன்றில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி குவேர டி சொய்ஸா முன்வைத்த கோரிக்கையை ஏற்று, இந்த உத்தரவை நீதிவான் பிறப்பித்தார். குறித்த சம்பவம் தொடர்பில் இதுவரை எவரும் கைது செய்யப்படாத நிலையில் தனது சேவை பெறுநருக்கு எந்த நியாயமும் கிடைக்கவில்லை என இதன்போது ஜனாதிபதி சட்டத்தரணி குவேர டி சொய்ஸா சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்த நிலையிலேயே உதவி பொலிஸ் அத்தியட்சர் ஒருவரின் கீழான 3 சிறப்புக் குழுக்களால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வந்த விசாரணைகளை நீதிமன்றம் சி.ஐ.டி.க்கு மாற்ற உத்தவிட்டுள்ளது.

முன்னதாக கடந்த பெப்ரவரி 14 ஆம் திகதி அதிகாலை பிலியந்தலை – கேம்பிரிஜ் கோர்ட் குடியிருப்பு தொகுதியில் வசிக்கும் சமுதித்தவின் வீட்டின் மீது கற்கள் மற்றும் மலம் கொண்டு தாக்குதல் நடத்தப்பட்டிருந்ததாக பொலிஸார் கூறினர்.

சிறிய ரக வெள்ளை வானில் வந்த நால்வர், குடியிருப்பு தொகுதியின் பிரதான நுழைவாயிலை வலுக்கட்டாயமாகத் திறந்து அங்கு பாதுகாப்பு கடமையிலிருந்த ஊழியரை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி, அவரை பாதுகாப்பு பணிக் கூடத்துக்குள் சிறைப் படுத்தியுள்ளனர்.

அதன்பின்னரே ஊடகவியலாளரின் வீட்டை நோக்கி சென்று இவ்வாறு தாக்குதல் நடாத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர் என முறையிடப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# கனடாவிலிருந்து சென்னை சென்ற புலம்பெயர் இலங்கை தமிழர் மர்மமான முறையில் மரணம்

கனடா வாழ் ஈழத்தமிழ் இளைஞர் ஒருவர் தனது தாயுடன் சென்னைக்கு சென்றிருந்த நிலையில், மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

சென்னையிலுள்ள மேல் மருவத்தூர் ஆதிபராசக்தி ஆலயத்தில் வழிபாடு செய்வதற்காக கடந்த 13 ஆம் திகதி சென்ற நிலையில் குறித்த இளைஞர் மர்மமாக உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

35 வயதான மகிந்தன் தயாபரராஜா எனும் இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். குறித்த இளைஞன், மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி சித்தர்பீட விருந்தினர் விடுதியில் தங்கியிருந்த நிலையில் தேநீர் வாங்குவதற்காக விடுதியை விட்டு வெளியே சென்ற நிலையில் காணாமல் போயிருந்தார். இதனையடுத்து காணாமல்போன 3 நாள்களின் பின்னர் மேல் மருவத்தூரில் இருந்து 40 கி.மீ. தொலைவில் வீதியோரம் மகிந்தன் தயாபரராஜா வீழ்ந்து கிடந்துள்ளார்.

வீதியோரத்தில் மயக்கமடைந்த நிலையில் காணப்பட்ட இளைஞரை வீதியால் சென்ற மருத்துவர் ஒருவரும், அங்கு இருந்தவர்களும் இலவச அம்புலன்ஸில் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இந்த நிலையில் 17 ஆம் திகதி அதிகாலை 5 மணி அளவில் அந்த இளைஞர் உயிரிழந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இளைஞரை மேல்மருவத்தூரில் இருந்து செங்கல்பட்டுவரை அழைத்துச் சென்றது யார் என்பது இதுவரை தெரியவரவில்லை. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# சைவப்புலவர் சங்க செயற்குழுக்கூட்டம்

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் செயற்குழுக் கூட்டம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் அகில இலங்கை சைவப்புலவர் சங்க தலைவர் சைவப்புலவர் சி.கா.கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது பரீட்சை சம்பந்தமான விடயங்கள் பட்டமளிப்பு விழா தொடர்பான முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளதால் அனைத்து நிர்வாக செயற்குழு உறுப்பினர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அகில இலங்கை சைவப்புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் அறிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 29.04.2022இல் வெளியிடப்பெற்றது.